சாதனை 18-8-2007 தினத்தந்தி இலவச இணைப்பு 5



# "வெற்றி எனது சேவகன்"

## இளைஞர்களுக்கு சொல்ல விரும்புவது

யாரும் பிறக்கும்போதே புத்திசாலிகள் இல்லை. இவ்வுலகில் யாருமே முட்டாள் இல்லை. எல்லோரிடமும் ஏதாவது ஒரு திறமை புதைந்திருக்கும். அதனை வளர்த்து மற்ற பல வீனங்களை குறைத்தாலே போதும். தானாக திறமை வெளிச்சத்திற்கு வந்துவிடும்.

அதே போல உழைப்பு கண்டிப்பாக பலன்களைத் தரும். கடினமான உழைப்பும், வாய்ப்பும் ஒரே நேர்கோட்டில் சந்தித்தால் மட்டுமே வெற்றி கிடைக்கும். அதுவரை காத்திருக்க வேண்டியது அவசியம்.

"வாழ்க்கையில தப்பு செய்யிறது தப்பில்ல. ஆனால் நாம என்ன தப்பு செய்திருக்கோம் என்று தெரியாமல் இருப்பதுதான் மிகப்பெரிய தப்பு" என ரஜினி பட வசனம் போல் பேசும் நந்தகுமார் ஐ.ஆர்.எஸ் (IRS), நமக்கெல்லாம் ஒரு முன் உதாரணம். ஒரு காலத்தில் லாட்டரி சீட்டு விற்கும் குழந்தைத் தொழிலாளியாக இருந்தவர், இப்போது வருமான வரித் துறையில் டெபுடி கமிஷனராக பணியாற்றுகிறார்.

"ஆறாம் வகுப்பிற்கு பிறகு, இரண்டு வருடம் மழைக்காக கூட நான் பள்ளியில் ஒதுங்கவில்லை. புத்தக வாசனையைக் கூட நுகர்ந்ததில்லை. லாட்டரி சீட்டு விற்பதும், மெக்கானிக் ஷாப்ல வேலை செய்வதும், ரேடியோ ரிப்பேர் செய்வதுமாக பல்வேறு அவதாரங்கள் எடுத்தேன். லாட்டரி அதிபராக மாறி கோடி கோடியாக சம்பாதிப்பது அல்லது பெரிய மெக்கானிக் ஆவது இவைதான் எனது அதிகபட்ச கனவுகள். முதலில் கொஞ்ச நாட்கள் பள்ளிக்கு போகாதது சந்தோசமாக இருந்தாலும், இரண்டு வருடத்தில் உலகம் புரிய ஆரம்பித்து விட்டது. "டேய் நந்தகுமார் அவசரப்பட்டு தப்பு பண்ணிட்டியேடா. இந்த சமூகம் உன்னை மதிக்குமா? உன் வயசு பசங்க எல்லாம் யூனிபார்ம் போட்டுக்கிட்டு பள்ளிக்கூடம் போறாங்களே!" என மனதிற்குள் அடுக்கடுக்கான கேள்விகள்.

"வாழ்க்கைங்கிறது வித்தியாசமான டீச்சர். முதலில் பரீட்சை வைக்கும். பிறகுதான் பாடங்களை வழங்கும்" என்று சொல்வார்கள். எனது வாழ்க்கையில் இது நூற்றுக்கு நூறு உண்மையாகி விட்டது. புத்தருக்கு போதி மரத்திற்கு அடியில் ஞானம் கிடைத்த மாதிரி, எனக்கு அந்த இரண்டு வருட அனுபவம் உண்மையை உணர வைத்தது. அதுதான் எனக்கு மன உறுதியையும் தந்தது.

உன்னையெல்லாம் பள்ளியில் சேர்த்துக்கொள்ள முடியாது. நீயெல்லாம் படிக்கவே லாயக்கற்றவன். உனக்கெல்லாம் சிவில் சர்வீஸ் பயிற்சி அளிக்க முடியாது. இப்படி 'முடியாது' 'முடியாது' என்று அனைவரும் என்னைப் பார்த்து சொன்னார்கள். அப்போது என்னால் 'முடியும்' 'முடியும்' என மனதிற்குள் ஒரு வெறி தீப்பொறியாய் கிளம்பும். அந்த தீப்பொறியை ஊதி, ஊதி, எண்ணை ஊற்றி கடுந்தணலாய் எரிய விட்டேன். மற்றவர்கள், என்னால் செய்ய முடியாது என்று சொன்ன அனைத்தையும், முடித்து காட்டியிருக்கிறேன்" என கத்தி போன்ற வார்த்தைகளில் கச்சிதமாய் பேசும் நந்தகுமார் சிறிது இடைவெளி விட்டு தொடர்ந்தார்.

### பிடித்த பொன்மொழி

நீ எதுவாக ஆக நினைக்கின்றாயோ, அதுவாகவே ஆகி விடுவாய் - **விவேகானந்தர்**.

செல்லும் பாதை சரியான பாதையாக இல்லாத பொழுது, வேகமாக ஓடுவதால் என்ன பலன்?

"வாழ்க்கையில் சில தவறுகள் நடந்துட்டா, பிறகு திருத்திக்கவே முடியாது போகும். அதைப்போல என்னை எந்தப் பள்ளியிலேயும் சேர்த்துக்கொள்ள மாட்டேன் என்று கூறி விட்டார்கள். அதனால் பள்ளிக்கு செல்லாமல் நானே படித்து நேரடியாக தேர்வு எழுதுவது என முடிவெடுத்தேன். அதன்படி →

## வாழ்வில் மறக்க முடியாத சம்பவம்

ஆறாம் வகுப்புடன் பள்ளி செல்வதை நிறுத்திய சமயம் நடந்த நிகழ்வு இது. எங்கள் ஊரில் இருந்த ஒருவர் ஐ.ஏ.எஸ் தேர்வுக்கு படித்துக் கொண்டிருந்தார். மிகப்பெரிய தடிமனான புத்தகங்களையெல்லாம் வைத்து படிப்பார். ஒருநாள் ஆர்வ மிகுதியால் அவருக்கு தெரியாமல் தடிமனான புத்தகத்தை தொட்டுப் பார்த்தேன். அப்போது திடீரென அவர் வந்துவிட்டார். "யாரைக்கேட்டு புத்தகத்தை தொட்டாய்?" என்று கூறி தண்டனையாக 15 நிமிடம் முட்டி போட வைத்தார்.

காலம் உருண்டோடியது. குரூப் 1 தேர்வில் வெற்றி பெற்ற நான் சில சிவில் சர்வீஸ் பயிற்சி மையங்களில், பயிற்சியாளராக இருந்தேன். புத்தகத்தை தொட்டதற்காக என்னை முட்டி போட வைத்தவர், அப்போது என்னிடம் மாணவராக வந்து சேர்ந்தார். ஆற்றில் மூழ்கி இருக்கும் கூழாங்கற்களைப் போல, வாழ்க்கை எவ்வளவு பெரிய சுவாரசியங்களை தனக்குள் மறைத்து வைத்துள்ளது என்பதை எண்ணி வியந்தேன்.

சிலவருடங்களுக்கு முன்பு என்னை பயிற்சியில் சேர்த்துக் கொள்ள முடியாது என்று கூறிய தனியார் பயிற்சி நிறுவனம், என்னை சிறப்பு விரிவுரையாளராக அழைத்து, மாணவர்களுக்கு பயிற்சி அளித்ததும் மற்றொரு மறக்க முடியாத அனுபவம்.

# பொது அறிவு

படித்து, 8 -ம் வகுப்பு, 10 -ம் வகுப்பு, 12-ம் வகுப்பு வரை பாஸாகி விட்டேன்.

அப்பாடா! ஒருவழியா தடைகள் பல தாண்டி பள்ளி படிப்பை முடித்துவிட்டோம். இனி கல்லூரியில் காலடி வைத்து விடலாம் என மனம் குதூகலமானது. ஆனால் அங்கேயும் விதி விளையாடியது. பள்ளியில் படிக்காததால் கல்லூரிகள் என்னை சேர்த்துக் கொள்ள தயங்கின. பல கல்லூரிகள் ஏறி இறங்கி இறுதியில் சென்னை அம்பேத்கர் கலைக் கல்லூரியில் சேர்ந்தேன். நான், ஆங்கிலம் என்றால் கிலோ எத்தனை ரூபாய்க்கு கிடைக்கும்? என்று கேட்பவன். விந்தையாக, கல்லூரியில் ஆங்கில இலக்கியத்துறை கிடைத்தது.

மீண்டும் சவால் வாழ்க்கை ஆரம்பமானது. கல்லூரியில் கடினமாக உழைத்து, பயிற்சி எடுத்து இறுதியில் "தேர்டு கிளாஸில்" பாஸ் ஆனேன். நாம ஐ.ஏ.எஸ் படித்தால் என்ன? என்று எனக்குள் தோன்றியது. எனக்கு தெரிந்த சீனியர் மாணவர் ஒருவரிடம் போய், எந்த கல்லூரியில் ஐ.ஏ.எஸ் படிப்பு சொல்லித்தருவார்கள்? என்று கேட்டேன். (இதைச் சொல்லும் போது சிரிக்கிறார்).

ஐ.ஏ.எஸ் என்பது போட்டித்தேர்வு. அது கூட தெரியாமல், அதை ஏதோ கல்லூரியில் படித்து வாங்கும் பட்டம் என்று நினைத்திருந்தேன். எனது சீனியர் சிரித்து

## ஸ்வாட் பரிசோதனை (SWOT Analysis) செய்ய வேண்டும்

முன்னேறத் துடிக்கும் அனைவரும் செய்ய வேண்டிய சுய பரிசோதனை. Strength (பலம்), weakness (பலவீனம்), opportunities (வாய்ப்புகள்), threat (எதிர்ப்பு) ஆகிய நான்கு வார்த்தைகளின் முதலெழுத்து சேர்ந்ததுதான் ஸ்வாட் சோதனை.

அதன்படி முதலில் உங்களின் பலம், பலவீனம், வாய்ப்புகள், எதிர்ப்புகள் ஆகிய நான்கையும் பட்டியலிட வேண்டும்.

முதல் இரண்டும் தனி நபரின் ஆளுமை சார்ந்தது. கடைசி இரண்டும் சூழ்நிலை சார்ந்தது. இந்த நான்கும் மனிதனுக்கு மனிதன் மாறுபடும். இந்த நான்கையும் ஆய்வு செய்து, திட்டமிட்டால் வெற்றிக்கான பாதை எளிமையாகி விடும்.

விட்டு சிவில் சர்வீஸ் தேர்வுக்கு நாமாகத்தான் படிக்க வேண்டும். அதற்கு கல்லூரி எல்லாம் கிடையாது, என விளக்கினார்.

சரியென்று சிவில் சர்வீஸ் தேர்வுக்கு பயிற்சி அளிக்கும் பிரபல தனியார் மையம் ஒன்றில் போய் சேர முயற்சித்தேன். உனக்கு அந்தளவிற்கு திறமை இல்லை என்று கூறி திருப்பி அனுப்பி விட்டனர். பரமபத பாம்பு போல, நான் சிறு வயதில் செய்த தவறு, என்னை விரட்டி விரட்டி கொத்தியது. என்ன நடந்தாலும் சரி கனவுகளை விடக்கூடாது என மனதிற்குள் வெறி ஏறியது. மீண்டும் நானே படிக்க வேண்டும் என முடிவு செய்தேன்.

ஆர்வத்துடன்படித்து டி.என்.பி.எஸ்.சி குரூப் 1 தேர்வு எழுதினேன். அதில் தேர்வு பெற்று, கோட்ட வளர்ச்சி அதிகாரியாக பணி கிடைத்தது. அதன் பிறகு சிவில் சர்வீஸ் தேர்விற்கு விடா முயற்சியுடன் படித்தேன். நான்கு முறை எழுதி இறுதியில் தேர்ச்சி பெற்றதில், வருமான வரி டெபுடி கமிஷனராக பணி கிடைத்துள்ளது. ஒரு காலத்தில் என்னை வேண்டாம் என ஒதுக்கிய சமுதாயம் இப்போது ஆச்சரியத்துடன் பார்க்கிறது.


படிப்பை பாதியில் நிறுத்தியவர்கள், நம்மால் முடியாது என சுணங்கி கிடப்பவர்கள் அனைவரும் மனம் தளர வேண்டாம். முடியுமா என்பது மூடத்தனம், முடியாது என்பது முட்டாள்தனம், முடியும் என்பதே மூலதனம். எனவே, நம்மால் முடியும் என்ற எண்ணத்தோடு போராடினால் சாதனை உங்களது சேவகனாகி விடும். என்னுடைய இத்தனை வெற்றிக்கு பின்னால் என் அம்மா மறைந்திருக்கிறார்" என்றார் நந்தகுமார்.



## பொது அறிவு தகவல்கள்

- ★ நவீன கார்ட்டூனின் தந்தை யார்? – **வில்லியம் ஹோகர்த்.**
- ★ உலகில் கண்டுபிடிக்கப்பட்ட முதல் ஆண்டிபயாடிக் மருந்து (எதிர் உயிரி மருந்து) எது? – **பென்சிலின் மருந்து.**
- ★ நூலகங்கள் அதிகம் உள்ள இந்திய மாநிலம்? – **கேரளா.**
- ★ ஆசியாவின் மிக நீளமான நதி எது? – **யாங்ட்சி கியாங்.**
- ★ கடல் மட்டத்துக்கு கீழே உள்ள ஒரே நாடு எது? – **டென்மார்க்.**
- ★ 13– வயதில் அரசரான முகலாய மன்னர்? – **அக்பர்.**
- ★ வண்ணத்துப் பூச்சிகளுக்கு எத்தனை ஜோடி சிறகுகள் உள்ளன? – **இரண்டு.**

## நெஞ்சம் மறப்பதில்லை



நத்தை தன் இருப்பிடத்தை விட்டு எவ்வளவு தூரம் சென்றாலும் வந்த வழியை மறப்பதில்லை. எங்கு சென்றாலும் திரும்பவும் தன் பழைய இடத்துக்கே வந்துவிடுகிறது. கிட்டத்தட்ட 15 கிராம் எடை கொண்ட நத்தைக்கு, தன்னை விட 30 மடங்கு கனமுள்ள பொருளை இழுத்து செல்லும் ஆற்றலும் உள்ளதாம்.

**எஸ்.ராஜேந்திரன், மணிக்கிராமம்.**

## பூமித்தாய்



மழைப் பொழிந்தவுடன்
பூமித்தாய் பிரசவித்திருக்கிறாள்
செடிகள் என்னும் குழந்தைகளாக...!

**வி.மாதேஸ், ஓசூர்.**